**போக்குவரத்துத் துறை**

**அனுப்புநர்**

பொது தகவல் அலுவலர்/ உதவிச் செயலாளர்-II,
போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு
ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5,

**பெறுநர் [ ப.அ.ஒ.அ ]**

திரு. ஜாஹிர் ஹீசைன், பொதுச் செயலாளர்,
உரிமைக் குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம்,
56/48, பழைய ஸ்டேட் பேங்க் காலனி,
மேற்கு தாம்பரம், சென்னை-600 045.

**ந.க.எண்.42574/M2/2022**

**நாள் : 23.11.2022.**

அய்யா,

**பொருள் :** தகவல் உரிமைச் சட்டம் 2005 – சில தகவல்கள் கோரப்பட்டது – வழங்குவது – தொடர்பாக.

**பார்வை :** பொது தகவல் அலுவலர்/பிரிவு அலுவலர், உள்(போ.வ.3) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களின் கடிதம் எண்.50119/போ.வ.3/2022-1, நாள்.03.11.2022 உடன் இணைத்து வரப்பெற்ற திரு. ஜாஹிர் ஹீசைன், பொதுச் செயலாளர், உரிமைக் குரல் ஓட்டுநர் தொழிலாளர் சங்கம், எண்.56/48, பழைய ஸ்டேட் பேங்க் காலனி, மேற்கு தாம்பரம், சென்னை-600 045. அவர்களின் மனு, நாள்.23.09.2022. (இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள்: 07.10.2022)

******

பார்வையில் காணும் தங்கள் மனுவில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் கோரப்பட்ட விவரங்களுக்கு கீழ்க்கண்டவாறு பதில் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | தமிழகத்தில் ஆட்டோக்களுக்கான மீட்டர் கட்டணம் கடைசியாக எப்போது நிர்ணயம் செய்யப்பட்டது? | தாங்கள் கோரும் விவரம் கேள்வி அடிப்படையில் உள்ளதால், தகவல் உரிமை சட்டம் (RTI) பிரிவு 2(F)-ன் படி தகவலாக வழங்க இயலாது. இருப்பினும் தாங்கள் கோரிய விவரம் – தமிழகத்தில் ஆட்டோக்களுக்கு மீட்டர் கட்டணம் கடைசியாக 2013-ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. |
| 2 | சென்னை உயர்நீதிமன்றம் ஆட்டோக்களுக்கான மீட்டர் கட்டணத்தை மாற்றி அமைக்க உத்தரவிட்டும் தமிழக அரசு ஆட்டோக்களுக்கான மீட்டர் கட்டணத்தை இன்னும் மாற்றி அமைக்காதது ஏன்? | இக்கோரிக்கை தொடர்பாக ஏற்கனவே, அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 3 | தமிழக அரசு ஆட்டோகளுக்கான மீட்டர் –கட்டணத்தை எப்போது மாற்றி அமைக்கும்? | இக்கோரிக்கை தொடர்பாக ஏற்கனவே, அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. |
| 4. | தற்போதுள்ள ஆட்டோ மீட்டர் கட்டணத்தை வைத்து ஆட்டோ ஓட்டுநர்களால் தங்கள் குடும்பத்தை நடத்த முடியுமா ? | தாங்கள் கோரும் விவரம் கேள்வி மற்றும் யூகத்தின் அடிப்படையில் உள்ளதால், தகவல் அறியும் உரிமை சட்டம் (RTI) பிரிவு 2(F)–ன் படி தகவலாக கருத இயலாது. |
| 5. | கேரளா அரசை போன்று தமிழக அரசு ஆட்டோ களுக்கான செயலியை துவக்குமா? துவங்கும் என்றால் எப்போது துவங்கும் என்று குறிப்பிடவும்? | தாங்கள் கோரும் விவரம் கேள்வி அடிப்படையில் உள்ளதால், தகவல் அறியும் உரிமை சட்டம் (RTI) பிரிவு 2(F)–ன் படி தகவலாக கருத இயலாது. |

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால், இந்த பதில் கிடைத்த 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டு ஆணையத்தில் அதாவது, இணைப் போக்குவரத்து ஆணையர் (விதிகள்), போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு முறையீடு செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பொது தகவல் வழங்கும் அலுவலர்/
உதவிச் செயலர்–II,
சேப்பாக்கம், சென்னை–5.

24/11/22

**நகல் :**

பொதுதகவல் அலுவலர் / பிரிவு அலுவலர்,
உள்(போ.வ.3) துறை,
தலைமைச் செயலகம்
சென்னை–5.